


118 இதழ்களாக முகத்தை உர்ர்ரென்று உர்ராங் உடான் மாதிரி வைத்துக்கொண்டு, படு தீவிர தீவிரவாத இயக்கங்களையே பார்த்துக்கொண்டு இருந்துவிட்டோம். அதனால் ஒரு மாறுதலுக்குச் சில வாரங்கள் ஜாலியாக இருக்கலாம் என்று உத்தேசம்.

ஒரு ஜப்பானிய இயக்கத்தை இப்பொழுது அறிமுகம் செய்துகொள்வோம். ம்ஹூம். அப்படிச் சொல்வது தப்பு. ஜப்பானிய இந்திய கொலாபரேஷனில் பிறந்த ஒரு பக்தி கோட்டட் பஜனை பயங்கரவாத இயக்கம். தலைப்பைப் பாருங்கள். ஓம்! அந்த ஒரு வார்த்தையை வைத்துத்தான் இந்த ஜம்போ இயக்கம் கட்டமைக்கப்பட்டது. முழுப்பெயர் ஓம் ஷின்ரிக்கியோ (Aum Shinrikiyo).

பத்துப் பதினைந்து கொள்கைத் தீவிரர்கள் ஒருங்கிணைந்து ஆரம்பித்த இயக்கம் அல்ல இது. ஒற்றை ஆசாமி. அசப்பில் தாடி வைத்த தக்காளிப்பழம் மாதிரி இருக்கிற இந்த மனிதர் சைக்கோவா, பைத்தியமா, அரை லூஸா, முழுத்தீவிரவாதியா என்று, கைதாகிப் பல வருடங்கள் ஆன பின்பும் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால், எண்பதுகளில் இவரது இயக்கம் புகழின் உச்சத்தில் இருந்தபோது, ஜப்பானிலும் ரஷ்யாவிலும் ஆஸ்திரேலியாவிலும் பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள் இவருக்கு இருந்தார்கள். வழிபடும் தொண்டர்கள். அவர் ஒரு வார்த்தை சொன்னால் ஊரையே காலி பண்ணிவிடத் தயாராக இருந்த வெறிபிடித்த பக்தர்கள். ஊரையென்ன, உலகத்தையே. உண்மையில் அதைத்தான் தன் லட்சியமாகவும் அவர் கொண்டிருந்தார்.

உலகம் அழியப்போகிறது. மூன்றாம் உலக யுத்தம் வந்துதான் தீரப்போகிறது. அமெரிக்கா ஒரு மாபெரும் அழிவு சக்தியாக அப்போது மறு அறிமுகப்படுத்தப்படும். ஜப்பான் மீண்டும் சவக்காடாகும். தப்பிக்க நினைத்தால் ஒரே ஒரு வழிதான். வாருங்கள். வந்து ஓம் ஷின்ரிக்கியோவில் இணைந்து கொள்ளுங்கள். பிரளய காலத்துப் பேழை நான். நவீன உலகத்தின் நோவா நான். ஆபத்பாந்தவன். அநாதரட்சகன். அசுரர்களை அழிக்கப் பிறந்த கலியுகக் கடவுள் பிரதிநிதி. ஓம், ஓம், ஓம்.

உணர்ச்சிப் பெருக்கெடுத்து ஓடும் சொற்பொழிவுகளால் ஊரெல்லாம், உலகெல்லாம் மக்களைத் தன்புறம் சுண்டி இழுத்த அவர் பெயர் சிஸுவோ மட்சுமோட்டோ (Chizuo Matsumoto). ஜப்பானில் உள்ள கியூஷு தீவில் ஒரு பிரமாண்டமான ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். பிரமாண்டம் என்பது வீட்டு ரேஷன் கார்டில் இருக்கிற பெயர்களின் எண்ணிக்கையை வைத்துச் சொல்லப்பட்டது. ஏகப்பட்ட டிக்கெட். 'ஏழைமை ஆற்றவும் பட்டோம், இனி என்றும் பொய்கைக்கு வாரோம்' என்று சும்மா இருந்துவிட முடியுமோ? என்னத்தையாவது செய்து வயிறு வளர்த்தாக வேண்டுமே? சிஸுவோவின் தகப்பனார் 'டடாமி' என்கிற தரை விரிப்புகள் நெய்து பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தார். பிராந்தியத்தில் கொஞ்சம் புகழ்பெற்ற தரைவிரிப்புக் கலைஞர் அவர். பிரபல ஹோட்டல்களிலும் நடன அரங்குகளிலும் பணக்கார வீடுகளிலும் அவரைப் பிரத்தியேகமாக வரவழைத்து, கம்பள விரிப்புகள் தயாரிக்கச் சொல்லுவார்கள்.



'டைம்' பத்திரிகையில் ஜோகோ...

ஏழை ஏதலன் என்றாலும் தொழிலில் படு சுத்தம். கிடைக்கிற காசை அப்படியே வீட்டுக்கு எடுத்து வந்துவிடுவார். பத்துக்கும் மேற்பட்ட உருப்படிகள் உண்டு உயிர் வளர்த்தாக வேண்டும். அதுவும் குடும்பத்தின் நம்பிக்கை நட்சத்திரமான சுஸுவோ மட்சுமோடோவுக்கு மிக இளம்வயதில் ஒரு கண்பார்வை வேறு போய்விட்டது (இடது கண்). இன்னொரு கண்ணும் பாதி தெரியாது. பக்கத்தில் வந்தால்தான் பார்க்க முடியும்.

ஆனால் முரடன். பள்ளிக்கூடத்துக்குப் போகிற நாட்களிலெல்லாம், ஏதாவது வம்பு வளர்த்துவிட்டுத்தான் வருவான். அத்தனை பெரிய ஸ்தூல சரீரத்தைக் கொண்டு சக மாணவர்களை எதிரியாக பாவித்து, தொபுக்கட்டீரென்று பெஞ்சு மீதேறி மேலே குதிப்பது அவனுக்குப் பிடித்த விளையாட்டு. எத்தனை எடுத்துச் சொன்னாலும் கேட்கமாட்டாத பிள்ளை.

கல்லூரி நாட்களில் சுஸுவோவின் முரட்டுத்தனம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைய ஆரம்பித்தது. சுமாராகப் படிக்கவும் தொடங்கினான். 1977-ம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்துவிட்டு அக்குபஞ்சர் வைத்தியம் கற்கச் சென்றான். ஜப்பானில் அது ஒரு வினோதம். பெரும்பாலும் கண்பார்வை சரியில்லாதவர்கள்தான் அக்குபஞ்சர் டாக்டராவார்கள் அங்கே. பார்வைக் குறைபாடு இருக்கிறவர்களுக்கு உள்ளுணர்வு சரியாக இருக்கும் என்று ஒரு கான்செப்ட்.

படித்து முடித்துவிட்டு, 1978-ம் ஆண்டு ஒரு கல்யாணமும் பண்ணிக் கொண்டான். அப்போதுதான் சுஸுவோவின் ஆன்மிக நாட்டம் ஆரம்பமானது. என்னவோ தோன்றி, திடீரென்று ஒருநாள் மத நூல்களை வாங்கிவந்து படிக்கத் தொடங்கினான். பவுத்த மதம். ஜுடாயிசம். டாவோயிசம். கிறிஸ்துவ மதம். இஸ்லாம். ஹிந்து மதம். கன்ஃபூஷியஸ் தத்துவங்கள். பவுத்தத்தின் பிரிவுகள். ஹீன, மஹாயானங்கள். மஹாயானத்தின் பிரிவான ஜென்.

ஒவ்வொன்றாகப் படித்தான். ஆழமாக, கவனமாகப் படித்தான். மதங்கள் என்ன சொல்கின்றன? ஏன் இருக்கின்றன? மக்களுக்கு ஏன் மதம் அவசியமாக இருக்கிறது? மத குருக்களுக்கு ஏன் மரியாதை அதிகமாக இருக்கிறது? கடவுள் என்பது என்ன? அல்லது யார்? மத குருக்கள் வழியே கடவுளை அடைய முடியுமா? முடியாது என்றால் வேறென்ன வேண்டும்?

யோசிக்கத் தொடங்கினான். படித்த பல மத நூல்களில் சுஸுவோவை மிகவும் கவர்ந்தவை ஹிந்து மத நூல்களும் சில பவுத்த நூல்களும். இரண்டுக்கும் பல ஒற்றுமைகள் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. கொஞ்சம் ஆழம் போனால், ஏதாவது கிடைக்கும் என்று நினைத்தான்.

அப்போது, இந்தியாவிலிருந்து ஜப்பானுக்குப் போய் யோகா கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த சில கார்ப்பரேட் மாடர்ன் சன்னியாசிகளைக் குறித்து செய்தித் தாள்களில் படித்துத் தெரிந்து கொண்டிருந்த சுஸுவோ, அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்துப் போய் யோகா கற்றுக் கொண்டான். உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினான்.

ஜப்பானியர்களின் அன்றாட வாழ்வில், மதத்துக்குப் பெரிய இடம் கிடையாது. விடிந்தால் நாலு வாய் கொட்டிக்கொண்டு வேலைக்கு ஓடிவிடுகிற வாழ்க்கை. ஓய்வு நாட்களிலும் செய்து முடிக்க இன்னின்ன பணிகள் என்று முந்தைய வாரமே திட்டமிட்டு வைத்துவிடுவார்கள். கிறிஸ்துவர்களைப் போல் வாரம் தவறாமல் சர்ச்சுக்குப் போகிற வழக்கமோ, இஸ்லாமியர்களைப் போல் ஐந்து வேளை தொழுகிற வழக்கமோ, ஹிந்துக்களில் சிலருக்கு இருப்பதைப் போல் நியம நிஷ்டைகளோ அவர்களுக்குக் கிடையாது. செய்யும் தொழிலே தெய்வம் என்கிற கான்செப்ட். ஏதாவது பண்டிகைக் காலம் வந்தால் மதம் நினைவுக்கு வரும். கடவுள் ஞாபகத்தில் வருவார். புத்தம் சரணம் கச்சாமி. கும்பிட்டுவிட்டு வேலையைப் பார்க்கப் போய்விடுவார்கள்.

இம்மாதிரி மனநிலையில் இருக்கும் ஜப்பானிய மக்களிடையே, மதத்தை முன்வைத்து தான் ஏதும் செய்வது கஷ்டம் என்று அவனுக்குத் தோன்றியது. ஆனால், மதத்தைக் கொண்டுதான் ஏதாவது சாதிக்கவேண்டும் என்றும் உறுதியாகத் தோன்றியது. ஒரு புதிய வெளிச்சத்தைத் தன் சமூகத்தில் தன்னால் பாய்ச்ச முடியும் என்று உறுதியாக நம்பினான்.

ஜப்பானியர்கள் மூக்குமேல் விரல்வைத்து ஆச்சர்யப்பட வேண்டும். ஒரு மறுமலர்ச்சி. மகத்தான மறுமலர்ச்சி. ஆன்மிக மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். அதுவும் தன்னால் ஏற்படவேண்டும். தான் கடைப்பிடித்து, வழிகாட்டும் பாதை அதி அற்புதமானதாக இருக்க வேண்டும். இதற்குமுன் யாராலும் செய்து பார்க்கப்படாததாக இருக்க வேண்டும். அதி உன்னதம் என்று புகழப்படவேண்டும். அதனைக் கொண்டே முழு தேசத்தையும் வசப்படுத்த வேண்டும். பிறகு படிப்படியாக தேச எல்லைகளைக் கடந்து தன் சிறகுகளை விரிக்க வேண்டும். உலகை வசப்படுத்த வேண்டும். அழிவு சக்திகள் அனைத்தையும் நசுக்கி நகர்த்த வேண்டும். ஒளிமயமான ஒரு பேருலகின் சக்கரவர்த்தியாக, தான் விளங்க வேண்டும்.

சுஸுவோவின் தினசரிக் கனவுகள் இப்படியாக விரிந்தன. ஒரு தியானம் மாதிரி இதையே எப்போதும் நினைத்துக் கொண்டிருந்தான். ஏதோ ஒன்றைச் சாதிக்கத்தான் தன்னைக் கடவுள் படைத்திருக்கிறான் என்பதில் அவனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. தன் பார்வைக் குறைபாடோ, ஏழைமையோ அவனுக்கு ஒரு பொருட்டாகவே இல்லை. மிக விரையில் ஜப்பான் முழுதும் சக்கரவர்த்தியைத் தொழுவதை நிறுத்திவிட்டுத் தன்னைத் தொழப்போகிறது என்று மனைவியிடமும் குடும்பத்தினரிடமும் சொல்லிக் கொண்டிருப்பான்.

இதென்ன பைத்தியக்காரத்தனம் என்றுதான் அவர்கள் நினைத்தார்கள். ஆனால், சுஸுவோ மனம் தளரவேயில்லை. தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் மாதிரி, தொடர்ந்து மத நூல்களை ஆராய்ச்சி செய்வதும், பல்வேறு மதத்தவர்களின் வழிபாட்டு முறைகளைப் பயிற்சி செய்வதுமாக இருந்தான். இந்திய யோகா, தியானம், பூஜை புனஸ்காரங்கள் அவனைக் கவர்ந்தன. அதே சமயம் பவுத்த மதத்தின் மென்மையான அணுகுமுறையும் அறிவுபூர்வமான உபதேசங்களும் சுண்டி இழுத்தன.

இரண்டையும் கலந்து ஒரு பர்ஃபெக்ட் ப்ளெண்ட் தயாரித்தால் தன் காரியம் நடந்துவிடும் என்று அவனுக்கு உறுதியாகத் தோன்றியது.

1985-ம் ஆண்டு சுஸுவோ இந்தியாவுக்கு ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டான். இமயமலைக் காடுகளில் சுற்றித் திரிந்துகொண்டிருந்த சில யோகிகளைச் சந்தித்து சில யோகப் பாடங்களைக் கற்றுக் கொண்டான். அப்புறம் தியானம். அதன் சில உயர்நிலைப் பாடங்கள். அவனுக்குப் பரவசமாக இருந்தது.

முன்னதாக, இந்தியா வருவதற்கு ஒரு வருடம் முன்னால்வரை ஜப்பானிலேயே அகோன்ஷு என்கிற ஒரு பவுத்த இயக்கத்தில் சேர்ந்து மெய்யறிவு கிடைக்குமா என்று பார்த்தான். அங்கே ஒரு வினோத வழக்கம். ஆயிரம் நாள் அந்த இயக்கத்தில் இருந்து தினசரி ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பணம் கட்டிப் படித்து வந்தால், 1001-ம் நாள் மெய்யறிவு சித்தித்துவிடும் என்று சொன்னார்கள்.

இதென்ன கேனத்தனம் என்று சுஸுவோ நினைக்கவில்லை. தன் கஷ்ட ஜீவனத்துக்கு இடையே எப்படியோ பணம் திரட்டி, தினசரி சம்பளம் கட்டி அந்த இயக்கத்தில் இருந்து பார்த்தான். என்னென்னவோ வகுப்புகள் எல்லாம் நடந்தன. ஆனால், மெய்யறிவு மட்டும் சித்திக்கவே இல்லை. ஆனால், இந்தியாவில் அவன் சந்தித்த யோகிகள் சொல்லிக் கொடுத்த சில யோகப்பாடங்களும் தியான முறைகளும் ஜப்பானில் ஒரு புதிய இயக்கம் தொடங்கி நடத்துவதற்குப் போதுமானவை என்று தோன்றிவிட்டது.

1987-ம் ஆண்டு ஜப்பானுக்குத் திரும்பிய சுஸுவோ, நேரே தன் தீவு வீட்டுக்குப் போகாமல் டோக்கியோவுக்குச் சென்று, ஒரு சிங்கிள் பெட் ரூம் அப்பார்ட்மெண்டை வாடகைக்கு எடுத்தான். வாசலில் ஒரு போர்டு மாட்டினான். ஓம் ஷின்ரிக்கியோ. இந்தோ ஜப்பானிய கொலாபரேஷன். ஓம் என்றால் ஓம். ஷின்ரிக்கியோ என்றால் உண்மை. உண்மையான மதம் என்று தன் புதிய இயக்கத்தின் பெயருக்கு விளக்கம் சொன்ன சுஸுவோ செய்த அடுத்த காரியம், தன் பெயரையும் மாற்றிக்கொண்டது.

இனிமேல் நான் சுஸுவோ மட்சுமோடோ இல்லை. என் பெயர் ஷோகோ அசஹாரா (Shoko Asahara) என்று அறிவித்தான்.

அன்றைய தினத்திலிருந்து ஷோகோ அசஹாரா ஷேவ் பண்ணுவதை நிறுத்திக்கொண்டான். இமாலயத்தில் பார்த்த யோகிகளின் இன்ஸ்பிரேஷன். சிம்பு, 'காதல் வளர்த்தேன்' என்று பாடியதுபோல் ஷோகோ 'தாடி வளர்த்தேன்' என்று பாடத் தொடங்கினான். நீண்ட தாடியும் நீண்ட கூந்தலும். கழுத்திலிருந்து கால் வரை மூடி மறைத்த ஒரு பேரங்கி. கையில் ஒரு ஜபமாலை. கண்ணில் எப்போதும் ஒரு மயக்கம். அரைக்கண் மூடித்தான் இருப்பான். கேட்டால் தியானம் அல்லது தபஸ்.

ரொம்பப் பிரமாதமான கெட்டப் அது. ஜப்பானில் அதற்குமுன் யாரும் அப்படியொரு கெட்டப்பில் தோன்றியதில்லை. ஷோகோவின் ரெகுலர் பேச்சுகள் குறைந்துவிட்டன. அக்கம்பக்கத்தாரிடம் கூடப் பேசுவதில்லை. எப்போதும் ஐயா தியானத்தில்தான் இருப்பார். எப்போதாவது ஒன்றிரண்டு சொற்கள் பேசுவார். அதுவும் ஆதிகால மொழியில் ஏதாவது. அர்த்தம் கண்டுபிடிக்க நிகண்டுகளைத்தான் தேடிப்போகவேண்டும்.

அந்த சிங்கிள் பெட் ரூம் ஃப்ளாட்டின் பக்கத்து போர்ஷன்களில் வசித்தவர்களைத்தான் 'ஷோகோ முதலில் கவர்ந்தான்' எப்பப்பார், சாமி தியானத்தில் இருக்கிறதே... என்று சாப்பிட ஏதாவது கொண்டுவந்து கொடுக்கிற அப்பாவிப் பெண்மணிகள். 'மங்களம் உண்டாகட்டும் தாயே' என்று, அப்படி வைத்துவிட்டுப் போய்விடச் சொல்லுவார். எப்போது சாப்பிடுவார், எப்போது உறங்குவார், என்ன செய்கிறார், எதற்குச் செய்கிறார் என்று யாருக்கும் தெரியவில்லை. ஆனால் ஒரு கவர்ச்சி இருந்தது. ஏதோ சக்தி உள்ள ஆசாமி என்று மக்கள் நம்பத் தொடங்கினார்கள்.

கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டம் சேரத் தொடங்கியது. ஐந்துபேர். பத்துப் பேர். இருபது பேர். இருநூறு பேர்.

சிங்கிள் பெட் ரூம் ஃப்ளாட் இனிமேல் போதாது என்கிற நிலை வெகு விரைவில் வந்தது. ஷோகோவுக்கு இதுதான் தன் வழி என்று உறுதியாகத் தோன்றிவிட்டது. ஓம் ஷின்ரிக்கியோவை உலக அளவில் விஸ்தரிக்கத் தயாராகத் தொடங்கினார்.

தன் ஆன்மிகத்தை எப்படி பேக்கேஜ் செய்யலாம் என்று தீவிரமாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். 'ஓம் ஷின்ரிக்கியோ சத்து பானம். தெய்வீக கூல்டிரிங். எல்லோரும் சாப்பிடுங்கள்' என்று, கோகோகோலா மாதிரி ஒரு குளிர்பானத்தை அந்த நிறுவனத்தின் சார்பில் தயாரித்து மார்க்கெட்டுக்கு அனுப்ப ஆரம்பித்தார்.

அதில் ஆரம்பித்ததுதான். வெகுவிரைவில் அணு ஆயுதத் தயாரிப்புகளுக்கான முஸ்தீபுகள் வரைக்கும் அவரது ஓம் ஷின்ரிக்கியோ நிறுவனம் முன்னேறி, ஷோகோவின் புகைப்படம் உலகப்புகழ்பெற்ற 'டைம்' பத்திரிகையின் அட்டையில் இடம்பெறும் அளவுக்குப் பிரபலமாகிப் போனார்.